

# ஸத் ஸம்ப்ரதாயம்




## शुक्लाम्बरधरं विष्णुं शशिवर्णं चतुर्भुजम् ।
## प्रसन्नवदनं ध्यायेत् सर्वविघ्नोपशान्तये ॥

**ஶுக்லாம்ப³ரத⁴ரம்' விஷ்ணும்' ஶஶிவர்ணம்' சதுர்பு⁴ஜம் |**
**ப்ரஸன்னவத³னம்' த்⁴யாயேத் ஸர்வவிக்⁴னோபஶாந்தயே ||**

வெண்ணிற ஆடை உடுத்தியிருப்பவரை, எங்கும் நிறைந்தவரை, சந்திரனைப் போன்ற நிறமுடையவரை, நான்கு கரங்களுடையவரை, எப்பொழுதும் மலர்ந்த முகத்துடன் விளங்குபவரை, எல்லா இடையூறுகளும் அகல்வதற்காக ஆழ்ந்து நினைப்பீராக.

## அருள் மொழிகள்

இறைவன் மற்றும் தர்மம் ஆகிய இரண்டையும் நம் ஸித்தாந்தத்திற்குரிய அடிப்படையாகக் கொள்ளாவிடில் பாரதீயர்கள் அல்லது இந்தியர்கள் என்று கூறிக்கொள்வதற்கே நமக்கு அருகதை இல்லை .

—ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹா ஸ்வாமிகள்

May 2022



## நீதிசதகம்

(மஹாகவி பர்த்ருஹரி)

**बोद्धारो मत्सरग्रस्ता: प्रभव: स्मय दूषिता: ।**
**अबोध उपहता:च अन्ये जीर्ण अंगे सुभाषितं ॥**
**अज्ञ: सुखं आराद्धय: सुखतरं आराधयते विशेषज्ञ: ।**
**ज्ञानलव दुर्विदग्धं ब्रह्मा अपि नरं न रंजयति ॥**

**போ3த்3தா4ரோ மத்ஸரக்3ரஸ்தா: ப்ரப4வ: ஸ்மய தூ3ஷிதா: |**
**அபோ3த4 உபஹதா:ச அன்யே ஜீர்ண அங்கே3 ஸுபா4ஷிதம் ||**
**அஜ்ஞு: ஸுக2ம்’ ஆராத்3த4ய: ஸுக2தரம்’ ஆராத4யதே விஶேஷஜ்ஞு: |**
**ஜ்ஞானலவ து3ர்வித3க்3த4ம்’ ப்3ரஹ்மா அபி நரம்’ ந ரஞ்ஜயதி ||**

அறிவூட்டக்கூடிய அறிவாளிகள் கர்வத்தினால் பொறாமை வசப்பட்டவர்கள், சிலர் விவேகம் எனும் விழிப்புணர்வு இல்லாதவர்கள், மற்றும் வயோதிகர்கள், இவர்களுக்காக வழங்கப்படும் நன்மொழிகள். விவேக புத்தி இல்லாத மூடன் விஷயஸுகங்களை பேணுகிறான். பகுத்தறிவுள்ளவனோ வஸ்து விவேகத்துடன் விரும்ப வேண்டியதை மட்டும் அநுசரித்து ஸுகம் எய்துகிறான். மந்த புத்தியுள்ள மனிதனை ச்ருஷ்டிகர்த்தா ப்ரஹ்மா கூட த்ருப்தி செய்யமுடியாது.
(ஒன்றுமே அறியாதவனையும், நன்கறிந்தவனையும், திருப்தி செய்துவிடலாம். ஆனால் அரைகுறை அறிவு படைத்தவனை ப்ரஹ்மா கூட திருத்த முடியாது )

(மூர்க்க பத்ததி: (மூர்க்கர்கள் இயல்பு)

## விதுர நீதி

**प्रविशान्त:पुरं क्षत्त: महाराजस्य धीमत: ।**
**न हि ते दर्शमेऽकल्प: जातु राजाप्रवीत्धि माम् ॥**
**ப்ரவிஶாந்த:புரம்’ க்ஷத்த: மஹாராஜஸ்ய தீ4மத: |**
**ந ஹி தே த3ர்ஶமே(அ)கல்ப: ஜாது ராஜாப்ரவீத்தி4 மாம் ||**

புத்திமானாகிய மஹாராஜாவின் அந்தப்புரத்திற்குத் தாங்கள் செல்லுங்கள் . தங்களைப் பார்ப்பதில் தனக்கு சலிப்பே இல்லையென அரசன் கூறினதாக தூதன் கூறினான்.

பிறகு விதுரர் திருதராஷ்டிரனின் அந்தப்புரம் சென்றுகவலையோடு இருக்கும் திருதராஷ்டிரனைப் பார்த்து நமஸ்கரித்து தங்கள் உத்திரவின்படி நான் வந்துவிட்டேன். என்னால் செய்யவேண்டிய காரியத்தை உத்திரவிட வேண்டும் எனக் கூறினார். ஓ விதுர, ஸஞ்ஜயன் தர்ம புத்ரரைப் பார்த்துவிட்டு என்னிடம் வந்து என்னை பலவாறாக நிந்தித்துவிட்டு நாளை சபையில் வந்து தர்ம புத்திரர் கூறிய வார்த்தைகளைச் சொல்லுவதாகச் சொல்லிச் சென்று விட்டான். ஆதலால் என்ன சொல்லப் போகிறானோ என்ற கவலையால் என் சரீரமெல்லாம், தவிக்கின்றது. அதனால் எனக்கு நித்திரை வரவில்லை. இம்மாதிரி உள்ள எனக்கு எது நன்மையை அளிக்குமென்பதை அறிந்து



தர்மத்தின் தத்துவமறிந்த விதுர, நீ உபதேசிக்க வேண்டும் என வேண்டினார். உடன் விதுரர் —

**अभियुक्तं बलवता दुर्बलं हीनसाधनम् ।**
**हृतस्वं कामिनं चोरं आविशन्ति प्रजागराः ॥**
**அபி⁴யுக்தம்' ப³லவதா து³ர்ப³லம்' ஹீனஸாத⁴னம் |**
**ஹ்ரு'தஸ்வம்' காமினம்' சோரம்' ஆவிஶந்தி ப்ரஜாக³ரா: ||**

ஸைன்யங்களற்றவனும் ஆயுத பலமற்றவனும் நல்ல பலம் வாய்ந்தவனால் எதிர்க்கப்பட்டவனுமான மனிதனுக்கும், பொருளை இழந்தவனுக்கும், காமிக்கும், திருடனுக்கும், தூக்கம் வராது. இம்மாதிரியான குற்றங்கள் உம்மிடம் இல்லாமல் இருக்கிறதா ? பிறர் பொருளில் ஆசை கொண்டு அதனால் தாபமடையாமல் இருக்கிறீரா ? எனக் கேட்டார். உடன் திருதராஷ்டிரன் இந்த ராஜரிஷி வம்சத்தில் பெரியோர்களால் அங்கீகரிக்கப்பட்டவன் நீ ஒருவனே. க்ஷேமத்தை அளிக்கக் கூடியதும் தர்மத்துடன் கூடியதுமான சொற்களைக் கேட்க ஆசைப்படுகிறேன் என்றார்.

விதுரர் கூறுகிறார் :

ஓ அண்ணா , அரசர்களுக்கு உரிய ஸகல லக்ஷணங்களையும் உடைய ராஜா எல்லாவுலகங்களுக்கும் அதிபதியாவான். அந்த லக்ஷணங்களை உடையவர் யுதிஷ்டிரர். அவரை தாங்கள் சமீபத்தில் வைத்துக் கொண்டு காப்பாற்ற வேண்டியதாய் இருக்க, அவரைக் காட்டிற்கு துரத்திவிட்டீர். நீர் ராஜலக்ஷணமற்றவர் உமக்கு நேத்ரமில்லை. நீர் தர் மாத்மாவாகவும் தர்மமறிந்தவராகவும் இருந்த போதிலும் ராஜ்யம் உமக்கு ராஜ்யமில்லாமையால் உம் தம்பி பாண்டு ராஜ்யத்தை அடைந்தார். ஆகையால் இராஜ்யம் அந்த வம்சத்துக்கே உரியது. யுதிஷ்டிரர் மிருதுவான ஸ்வபாவமும் தயை, தர்மம், ஸத்யம், சூரத் தன்மை முதலிய குணங்கள் உடையவரானபடியாலும் நீர் அவருக்கு பெரியோரானபடியாலும் நீர் செய்து வந்த உபத்திரவங்களைப் பொறுத்து வந்திருக்கிறார். இராஜ்யம் ஆளுகிறவன் பண்டிதனாக இருக்க வேண்டும். அந்த குணம் பாண்டவர்களிடத்தில் இருக்கிறது. உம்முடைய புத்திரர்களிடத்திலில்லை . அப்படியிருக்க துரியோதனன், சகுனி, கர்ணன், துச்சாஸனன் இவர்களிடத்தில் இராஜ்யத்தைக் கொடுத்து நீர் எவ்வாறு க்ஷேமத்தை அடைய விரும்புகிறீர் ? இனி விதுரர் செய்யும் உபதேசங்கள்.

**आत्मक्ज्ञानं समारम्भः तितिक्षा धर्मनित्यता ।**
**यमर्थान्नापकर्षन्ति स वै पण्डित उच्यते ॥**
**ஆத்மக்ஞானம்' ஸமாரம்ப⁴: திதிக்ஷா த⁴ர்மநித்யதா |**
**யமர்தா²ன் நாபகர்ஷந்தி ஸ வை பண்டி³த உச்²யதே ||**

பரமாத்மாவை அறிதல், நல்ல முயற்சி, பொறுமை, நித்யம் தர்மத்தை அனுஷ்டித்தல், இவைகள் எவனை புருஷார்த்தத்திலிருந்து நழுவச் செய்யவில்லையோ, அவனே அறிவாளியாவான்.

(தொடரும்...)




## ஆசார்யாளின் உபதேசங்கள்

**(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாசஸ்வாமிகள் அருளியது)**

## ஆசார்யர் என்பவர் யார் ?

கிருஷ்ண பரமாத்மாவும் ஸாந்தீபணீ மஹரிஷியிடம் பாடம் கற்றுக் கொள்வதற்காகச் செல்ல வேண்டுமா என்று கேட்டால், அது ஒரு சம்பிரதாயம். "குருவினால் உபதேசிக்கப்பட்ட ஞானம்தான் பிரயோஜனத்திற்கு வரும்; ஸபலமாகும்" என்று உபநிஷத் கூறுகிறது. குரு உபதேசம் இல்லாது வந்திருக்கக்கூடிய ஞானம் ஸபலமாகாது. "அங்கு என்ன வித்யாஸம் ? குரு சொன்னால் என்ன ? சொல்லா விட்டால் என்ன?" என்று கேட்டால், வித்யாஸம் வெளியில் பார்ப்பதற்கு ஒன்றும் இருக்காது. உள்ளார்ந்த ஒரு வித்யாஸம் இருக்கும். சாஸ்திரத்திலே ஒரு விதி உண்டு. "கர்மாக்களைச் செய்யும் போது ஹோமம் செய்ய வேண்டும்" என்று சொன்னால், எதனால் ஹோமம் பண்ணுகிறோமோ அதற்கு ஒரு ஸம்ஸ்காரத்தைச் செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. அங்கே சொல்லியிருக்கின்ற



(ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் மற்றும் (ஸ்ரீ சீதா ராம அஞ்சனையலு பூர்வாஸ்ரமம்) ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்)

மந்திரங்களைக் கூறி, தர்பைகளை வைத்து அந்த இடத்தை துடைக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறது! "அதைத் துடைக்காமல் ஹோமம் செய்தால் ஹோமம் நடக்காதா? என்று கேட்டால், "செய்யலாம். ஆனால், அதிலிருந்து வர வேண்டிய பலன் வராது." இங்கே, நாம் ஓர் ஆஸ்திக பரம்பரையில் சேர்ந்திருக்கிறோம். நம் கண்ணுக்குத் தெரியாத விஷயங்கள் பல இருக்கின்றன என்ற நம்பிக்கை நமக்கு உண்டு. என் கண்ணுக்குத் தெரியக் கூடியதைத்தான் நான் நம்புவேன், தெரியாததை நான் நம்பமாட்டேன் என்று சொல்லக் கூடியது நம்முடைய பரம்பரை அல்ல; நம்முடைய கலாச்சாரம் அல்ல! அது சார்வாகன் சொல்லக் கூடியது; ஒரு நாஸ்திகன் சொல்லக் கூடியது.

ஒரு நாஸ்திகன் சொல்லக்கூடிய வார்த்தைக்கு எந்த விதமான மதிப்பும் கிடையாது என்பது நம் தீர்மானம். நம் கண்ணுக்குத் தெரியாத விஷயங்கள்



பல இருக்கின்றன. அதைப் பற்றிச் சொல்லக்கூடிய உரிமை சாஸ்திரத்திற்குத்தான் இருக்கிறது, நமக்குக் கிடையாது. அந்த சாஸ்திரம், “நீ இந்த வஸ்துவிற்கு ஒரு ஸம்ஸ்காரம் பண்ணி, அந்த ஸம்ஸ்காரத்தினால் புனிதமடைந்த அந்த வஸ்துவினால் ஹோமம் செய்தால்தான் அதற்குரிய பலன் கிடைக்கும்” என்று சொல்கிறது. அங்கே எந்த ஒரு குதர்க்கத்திற்கும் அவகாசமே கிடையாது, “நான் இந்த ஸம்ஸ்காரம் பண்ணமாட்டேன்” என்றால் என்ன அர்த்தம் ?

முதலில் , இந்த ஹோமம் செய்ய வேண்டும் என்ற பாவனை உனக்கு எப்படி வந்தது ? “இந்த ஹோமம் பண்ணினால் இந்த பலன் கிடைக்கும் என்று சாஸ்திரம் சொல்கிறது” என்று நீ சொல்வாயேயானால், அதே சாஸ்திரம்தான், “இந்த ஸம்ஸ்காரம் பண்ணி அதனால் ஹோமம் பண்ணினால்தான் அந்த பலன் வரும்” என்றும் சொல்கிறது. அதே சாஸ்திரத்திலே, இந்த பக்கத்திலே சொன்ன பலனை ஒத்துக்கொள்கிறேன், அடுத்த பக்கத்திலே சொன்ன விஷயத்தை ஒத்துக்கொள்ள மாட்டேன் என்று சொன்னால் அதற்கு என்ன அர்த்தம் ? அதே மாதிரி, “நான் புத்தகத்திலிருந்து படித்தாலும் அதேதான் இருக்கிறது; குருவும் அதையேதான் சொல்கிறார், இதில் என்ன வித்யாஸம் இருக்கிறது?” என்று கேட்டால், ஸம்ஸ்காரம் செய்யாத ஒருவனால் ஹோமம் செய்தால் எப்படி பலன் இல்லையோ அதே போல் குரு உபதேசம் இல்லாமல் புத்தகம் படித்து வந்த ஞானத்திற்கும் பலன் இல்லை. இந்த விஷயத்தை மனதில் வைத்துக் கொண்டுதான், பகவான் ஸ்ரீ இராமசந்திர மூர்த்தியாகட்டும், பகவான் கிருஷ்ண பிரமாத்மாவாகட்டும், பகவான் ஆதிசங்கரராகட்டும், குருவின் சந்நிதிக்குப்போய் குருவின் மூலமாக ஞானத்தை சம்பாதித்துக் கொண்டார்கள். இதுதான் நம்முடைய பரம்பரையில் நம்முடைய ஸநாதன தர்மத்திலே, நம்முடைய பாரதீய ஸம்ஸ்க்ருதியிலே இருக்கின்ற ஒரு தத்துவம். பகவான் கீதையிலே சொல்கின்ற போது ,

“உபதேக்ஷ்யந்தி தே ஞானம் ஞானியஸ்தத்த்வதர்சின: || என்று சொன்னார்.

தத்துவதரிசிகளான மகாத்மாக்கள் உனக்கு ஞானத்தை உபதேசம் செய்வார்கள் என்று சொன்னார். அது மட்டுமல்ல. மற்றோரு இடத்தில்,

இமம் விவஸ்வதே யோகம் ப்ரோக்தவானஹமவ்யயம் |
விவஸ்வான் மனவே ப்ராஹ மானுரிக்ஷ்வாகவேSப்ரவீத் ||

என்றார். அதாவது, “இதை நான் சிருஷ்டியாதியிலேயே சூரியனுக்கு உபதேசம் பண்ணினேன்” என்று சொல்கிறார். அப்போது, இந்த குரு சிஷ்ய பரம்பரை சிருஷ்டியாதியிலேயிருந்து வந்திருக்கிறது என்றே சொல்லவேண்டும். குரு இல்லாமல் நாம் நம்முடைய வாழ்க்கையை நடத்தவே முடியாது. ஆகையால் குரு-சிஷ்ய சம்பிரதாயம் மூலமாக சாஸ்திரத்தின் தத்துவத்தைத் தெரிந்து கொண்டவன்தான் திரும்ப குரு ஆக முடியும்.....
(தொடரும்....)



## புருஷ ஸூக்தம்
**(ரிக்வேதம், 10.8.90)**
**விளக்கம் மட்டும் இங்கு பார்க்கப்படும்**

5. அந்த ஆதி புருஷனிடமிருந்து பிரம்மாண்டம் உண்டாயிற்று. பிரம்மாண்டத்தைத் தொடர்ந்து பிரம்மா உண்டாகி எங்கும் வியாபித்தார். பிறகு அவர் பூமியைப் படைத்தார். அதன்பிறகு உயிர்களுக்கு உடலைப் படைத்தார்.

**இனி இரண்டாம் படைப்பு விளக்கப்படுகிறது** :-
6. இறைவனை ஆஹுதிப்பொருளாகக் கொண்டு தேவர்கள் செய்த வேள்விக்கு வசந்த காலம் நெய்யாகவும், கோடைக்காலம் விறகாகவும், சரத் காலம் நைவேத்தியமாகவும் ஆயிற்று.

7. இந்த வேள்விக்கு பஞ்சு பூதங்கள், இரவு, பகல் ஆகிய ஏழும் பரிதிகளாக ஆயின. இருபத்தொரு தத்துவங்கள் விறகுகள் ஆயின. தேவர்கள் யாகத்தை ஆரம்பித்து , பிரம்மாவை ஹோமப் பசுவாகக் கட்டினார்கள்.

8. முதலில் உண்டான அந்த யஜ்ஞ புருஷனான பிரம்மாவின் மீது தண்ணீர் தெளித்தார்கள். அதன்பிறகு சாத்தியர்களும் தேவர்களும் ரிஷிகளும் இன்னும் யார்யார் உண்டோ அவர்களும் யாகத்தை நடத்தினார்கள்.

9. பிரபஞ்ச வேள்வியாகிய அந்த யாகத்திலிருந்து தயிர் கலந்த நெய் உண்டாயிற்று. பறவைகளையும், மான், புலி போன்ற காட்டு விலங்குகளையும், பசு போன்ற வீட்டு மிருகங்களையும் பிரம்மா படைத்தார்.

10. பிரபஞ்ச வேள்வியாகிய அந்த யாகத்திலிருந்து ரிக் வேத மந்திரங்களும், சாம வேத மந்திரங்களும், காயத்ரீ முதலிய சந்தஸ்களும் உண்டாயின. அதிலிருந்தே யஜுர் வேதம் உண்டாயிற்று.

11. அதிலிருந்தே குதிரைகளும், இரு வரிசைப் பற்கள் உடைய மிருகங்களும், பசுக்களும், வெள்ளாடுகளும், செம்மறியாடுகளும் தோன்றின.

12. பிரம்மாவை தேவர்கள் பலியிட்டபோது அவரை எந்தெந்த வடிவாக ஆக்கினார்கள் ? அவரது முகம் எதுவாக ஆயிற்று ? கைகளாக எது சொல்லப்படுகிறது ? தொடைகளாகவும் பாதங்களாகவும் எது கூறப்படுகிறது ?

13. அவரது முகம் பிராமணனாக ஆயிற்று. கைகள் க்ஷத்திரியனாக ஆயின. தொடைகள் வைசியனாக ஆயின. அவரது பாதங்களிலிருந்து சூத்திரன் தோன்றினான்.

(தொடரும்...)



## என்றும் புதியவர்
### ஜகத்குரு சங்கராசார்யார் ஸ்ரீமத் அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள்

**முன்னுரை**

முதலாவது, ஆசார்யாளைப் பற்றிப் பேசுவதற்கு எந்தக் காரணமும் தேவையில்லை. உலகத்தில் ஒரு அழகிய காட்சியைப் பார்த்து நமது மனம் சற்று நேரத்திற்காவது அதில் ஒன்றிவிடுகிறது. அந்த அனுபவத்தைச் சிலர் இசையாக வெளிப்படுத்துகிறார்கள்; இன்னும் சிலர் கவிதை எழுதுகின்றனர்; பலர் அந்த அனுபவத்தை ஒரு தாமியின் வாயிலாகப் புனைகிறார்கள். சாதாரணமான ஒரு காட்சியே சராசரி மனிதனை ஒரு பாடகனாகவோ கவிஞனாகவோ மாற்றும் போது, தனிச்சிறப்பு மிகுந்த ஆசார்யாளின் வரலாற்றைக் கேட்பவர்கள் அதைப் பற்றிச் சற்று சிந்தித்தும் வியந்தும் தமக்குத் தோன்றியவற்றைக் கடுவனிள வெயினனார் சொன்னது போல் “ஈங்கூங்கு கிளப்ப” முற்படுவதில் வியப்பேதும் இல்லை.



இரண்டாவது காரணம் இந்நூலின் தலைப்பிலேயே இருக்கிறது. ஆசார்யாள் “என்றும் புதியவர் “. ஒவ்வொரு முறையும் அவருடைய வரலாற்றைப் படிக்கும் போதோ அல்லது அதில் பதிவு செய்யப் பட்டிருக்கும் ஒரு நிகழ்வைப் பற்றிப் பேசும் போதோ ஏதாவது ஒரு புதிய கூறு மனதில் படுகிறது. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. இவற்றுள் இந்த நூலில் ஆசார்யாளின் ஆளுமையை நாம் முக்கியமான காரணமாகக் காட்டவுள்ளோம். அதாவது, ஆசார்யாள் எப்பொழுதும் புதிதாய்த் தோன்றுவதற்கு முக்கிய காரணம் அவருடைய ஆளுமையின் அகத்திறல். பார்ப்பவரின் மனப்பாங்கினால் அல்லது அறிவுத்திறனால் மட்டும் அவர் புதிதாகத் தோன்றுவதில்லை;பல பண்புக் கூறுகள் பல்வேறு விதமாக அவரிடம் அமைந்திருந்ததால் அவருடைய ஆளுமையும் பன்முகத் தன்மையுடன் விளங்கியது. இதுவே அவர் என்றும் புதியவராக இருப்பதற்கான காரணம் என்பதை அவருடைய வாழ்க்கையில் நடந்த பல நிகழ்வுகளின் வாயிலாகக் காட்டுவோம்.

முதலில் ஆசார்யாளின் ஆளுமையைப் பற்றிச் சுருக்கமாகக் கூறி அதன் பின் இந்நூலில் இதை எப்படி விவரிக்கப் போகிறோம் என்பதைக் கூறுவோம். ஆசார்யாளின் சிஷ்யரான ஜகத்குரு ஸ்ரீமத் பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் , ஆசார்யாளின் பெருமையைப் போற்றும் அஷ்டோத்தர சத நாமாவளி ஒன்றை எழுதியிருப்பது பலரும் அறிந்திருக்கலாம்....

(தொடரும் ...) மிக்க நன்றி : Centre for Brahmavidya



# நீதி மஞ்ஜரீ

## ஸ்ரீ ஞானானந்த பாரதீ ஸ்வாமிகள் இயற்றியது.

**அத்தியாயம் 1**
**நல் வாழ்க்கை**



Jagadguru Sri Abhinava Vidyatirtha Mahaswamigal and Jagadguru Sri Bharati Tirtha Mahaswamigal with Sri Jnanananda Bharati (purvashrama name : Sri Krishna Swami Aiyar) who was an ardent follower of Sringeri Mutt. He wrote many articles, experiences and life history of Jagadguru Sri Chandrashekhara Bharati Mahaswamigal, without which we would not have known much of this great Jivanmukta.
– Posted by N Jambunathan Iyer, Chennai Tamil Nadu India

ஒருவர் ஸுகமாயிருந்து வருவதை நாம் பார்க்கும் போது நாமும் அவர்போல இருந்தால் நல்லது என்ற ஆசை உண்டாகிறது. அந்த ஆசையை நிறைவேற்றிக்கொள்ள முடியவில்லையென்றால் அவரிடம் அஸூயை ஏற்படுகிறது. அஸூயை முற்றினதேயானால் தனக்கு ஸுகம் கிடைக்காமல் போனாலும் அவருடைய ஸுகத்தைக் கெடுக்க வேண்டுமென்ற மாத்ஸர்யம் உண்டாகிறது. அந்த ஆசையை நிறைவேற்றிக்கொள்ள அவரிடம் போட்டி போடத் தோன்றுகிறது. ஆசை நிறைவேறிவிட்டால் தானும் அந்த ஸுகத்தை சம்பாதித்து விட்டோம் என்ற மதம் ஏற்படுகிறது. செய்யும் பிரயத்தினம் நன்கு பலித்து அவரை விட அதிகமான ஸுகம் கிடைத்துவிட்டால் அவரிடம் அவமதிப்பு ஏற்படுகிறது. இவ்விதமாகப் பல விதத்தில் மனதில் சாந்தியைக் கெடுக்கக்கூடிய விருத்திகள் ஏற்படும். இவைகளுக்கெல்லாம் மூல காரணம் தனக்கில்லாத ஸுகம் வேறொருவரிடம் இருக்கிறதே என்ற எண்ணம் தான். இதை நிவிர்த்தி செய்வதற்கு ஒரே வழி தான் உண்டு. எவ்வித ஆசையுமற்ற ஆத்ம நிஷ்டையிலிருப்பதை இங்கே சொல்ல வரவில்லை. ஸாமான்ய தசையிலிருப்பவர்களுக்கே வழி சொல்லப்படுகிறது. அதாவது, யாரிடம் ஸுகமிருப்பதாகக் காண்கிறோமோ அவரை வேற்று மனுஷியராகப் பார்க்காமல் நம்மைச் சேர்ந்தவர் என்றே பாவித்துவிட்டால் மேலே கண்ட கெட்ட விருந்துகள் யாதொன்றும் ஏற்படாது. இந்த பாவனையைத்தான் மைத்ரீ, மித்ரத்தன்மை, ஸ்நேஹம் என்று சொல்லுகிறது.

நாம் மிகவும் ஆசையுடன் ஏதோ ஒரு பழத்தை சாப்பிட்டு ஸுகமடைய வேண்டுமென்று நினைத்து சிரமப்பட்டு சம்பாதித்து வீட்டுக்குக் கொண்டு வந்து வைத்திருப்போம். ஏதோ அவஸர காரியமாக உள்பக்கம் போய்விட்டுத் திரும்பி வந்து பார்க்கையில் அப்பழத்தைக் காணவில்லை என்றால் நமக்கு துக்கம் கவலை எல்லாம் ஏற்படுவது ஸஹஜம். யார் எடுத்துக் கொண்டு போனானென்று தெரியாதபோதே அந்தத் தெரியாதவரிடம் கோபமும் வரும். அப்படியிருக்க முன்பின் ஸம்பந்தமில்லாதவர் ஒருவர் வந்து “நான்தான் எடுத்து சாப்பிட்டுவிட்டேன்” என்று சொன்னால் கோபம் வரும் என்பதில் ஸந்தேஹமில்லை.

(தொடரும் …) மிக்க நன்றி : ஸ்ரீ ஞானானந்த பாரதீ க்ரந்த ப்ரகாசன ஸமிதி



# श्रीगणेशस्तुति

## ஶ்ரீக³ணேஶஸ்துதி

**(ஶ்ரீ சிருங்ககிரி ஶ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஶ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் இயற்றியது)**

गजपुङ्गवमीशसुतं सततं जठर प्रविभासित रत्नचयम् ।
वितताखिलविश्वयशोविततिं चितिलिप्सुरहं समुपैमि गतिम् ॥१॥
க³ஜபுங்க³வமீஶஸுதம்' ஸததம்' ஜட²ர ப்ரவிபா⁴ஸித ரத்னசயம் |
விததாகி²லவிஶ்வயஶோவிததிம்' சிதிலிப்ஸுரஹம்' ஸமுபைமி க³திம் ||1||

சிறந்த ஆண்யானை. ஈசனின் புதல்வர், வயிற்றின் மீது ரத்ன மாலைகள் பூண்டவர், உலகமனைத்திலும் பரவிய புகழ் உள்ளவர். இந்த பகவானை பேரறிவு பெறவிரும்பி எப்போதும் சரணடைகிறேன்.



दीना मत्तान्धनिकान् किमिति
व्रजताश्रयध्वमङ्घ्रिं मे ।
कमलोत्पादनदक्षं बोधयतीत्थं
सभाधिनाथोऽयम् ॥२॥
தீ³னா மத்தாந்த⁴னிகான்
கிமிதி
வ்ரஜதாஶ்ரயத்⁴வமங்த்²ரிம்'
மே |
கமலோத்பாத³னத³க்ஷம்'
போ³த⁴யதீத்த²ம்'
ஸபா⁴தி⁴நாதோ²(அ)யம் ||2||

எளியவர்களே ! திமிர் பிடித்த தனிகரை ஏன் அணுகுகிறீர்கள். லக்ஷ்மீயை உற்பத்தி செய்யவல்ல என் சரணத்தை அடைவீர் என இந்த ஸபாநாதரான கணபதி அறிவுறுத்துகிறார்.

कमलं तार्क्ष्यं सर्पं निकटे धत्से किमर्थमीशसुत ।ஈசனின்
आसनवाहनभूषणदानार्थं ज्ञातमङ्घ्रिनम्राणाम् ॥३॥
கமலம்' தார்க்ஷ்யம்' ஸர்பம்' நிகடே த⁴த்ஸே கிமர்த²மீஶஸுத |
ஆஸனவாஹனபூ⁴ஷணதா³னார்த²ம்' ஜ்ஞாதமங்த்²ரினம்ராணாம் ||3||

ஈசனின் புதல்வரே ! தாமரையையும், கருடனையும் நாகத்தையும் ஏன் அருகில் வைத்துள்ளீர் ? தன் திருவடி வணங்குபவரை (பிரம்மாவாக்கி) ஆஸனமாக (தாமரையையும்) (விஷ்ணுவாக்கி) வாஹனமாக (கருடனையும்) (சிவனாக்கி) ஆபரணமாக (நாகத்தையும்) தருவதற்கல்லவா ? புரிகிறது.



# ஸ்ரீமத் வால்மீகி ராமாயண மாஹாத்ம்யம்
## (வால்மீகி ராமாயணத்தின் சிறப்பு)
### (ஸ்ரீ ஸ்கந்தபுராணம் உத்தரகண்டத்தில் நாரதர்-ஸநத்குமாரரிடையே நடந்த உரையாடல்)

### அத்தியாயம் 1
**(கலியுகத்தில் மக்களின் தாழ்நிலை; இராமாயண பாராயணத்தால் ஏற்படும் பலன்கள் மற்றும் இராமாயணம் கேட்பதற்கு உகந்த காலம்)**

**ஸூதர் கூறுகிறார் :-** முனிவர்களே ! நீங்கள் எல்லோரும் எதைக் கேட்க விரும்புகிறீர்களோ, அதை உங்களுக்குச் சொல்கிறேன். இராமாயணம் என்ற பேரிலக்கியம், மகாத்மாவான நாரதரால் ஸநத்குமாரருக்குக் கூறப்பட்டது. அது, எல்லா வேதப்பொருள்களையும் உட்கிடையாகக் கொண்டது. எல்லாப் பாவங்களையும் அழிக்கக்கூடியது, துன்பம் தரும் கோள்களை நெருங்க விடாமல் விலகிப் போகச் செய்வது. (கிரகங்களின் தொல்லையிலிருந்து காப்பாற்றுவது.)



இராமாயணம் தீய கனவுகளை ஒழிக்கவல்லது, பெருமையைத் தரக்கூடியது. இவ்வுலக இன்பங்களையும், பின்னர் மோட்சத்தையும் அளிக்கக்கூடியது. அந்தக் காவியத்தில் ஸ்ரீ ராமப்பிரபுவினுடைய வரலாறு விளக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது. அந்தக் காவியத்தைப் படிப்பவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் எல்லா நலன்களையும் நிச்சயமாகக் கொடுக்கக் கூடியது.

இராமாயணம் என்ற இந்த இதிகாசம் தருமம்-அர்த்தம்-காமம்-மோட்சம் என்பதான நான்கு புருஷார்த்தங்களுக்கும் அடிப்படைக் காரணமாக அமைத்து மகத்தான பலன்களை அளிக்கக் கூடியது. இதற்கு முன்னர் வெளியிடப்படாத இந்தச் சரித்திரம் , புண்ணியமான பலனைக் கொடுக்கக் கூடியதாகையால் மிகவும் கவனத்துடன் கேளுங்கள்.

உபபாதகங்கள், மஹாபாதகங்கள் என்று கூறப்படும் எல்லாவித பாவங்களையும் செய்தவனாக இருந்தாலும், வால்மீகி முனிவரால் இயற்றப்பட்ட நாரத முனிவரால் கூறப்பட்ட தெய்விகமான இந்தக் காவியத்தைக் கேட்பதாலேயே பாவங்கள் நீங்கப் பெற்று பரிசுத்தனாகிறான்.

உலக நன்மையில் ஊக்கமுடைய சான்றோர்கள், இராமாயணத்தில் கூறப்பட்ட நன்னெறிகளைப் பின்பற்றி நடப்பார்களேயானால், அவர்களே இவ்வுலகில் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து முடித்தவர் ஆவார்கள். அவர்களே எல்லா அறநூல்களிலும் வல்லவர் ஆவார்கள்.

அந்தணோத்தமர்களே ! தரும-அர்த்த-காம-மோட்சங்களுக்கு சாதனமான இராமாயணம் என்பது மேன்மையான அமுதம் போன்றது.



அதனால், எப்போதும் மிகவும் பக்தியுடன் கேட்கப்பட வேண்டியதாகும். எவனுடைய முற்பிறவியில் செய்யப்பட்ட பாவங்கள் முற்றிலுமாக அழிந்துபோய் விட்டனவோ, (எவனுடைய மனம் தூய்மையாகி விட்டதோ…) அவனுக்கு இராமாயணத்தின் பால் மிகுந்த பற்று ஏற்படுகிறது என்பது நிச்சயம்.



பாவத்தின் பிடியில் சிக்கிக் கொண்டிருப்பவன், இராமாயணம் என்னும் மிகவும் புனிதமான காவியம் சொல்லப்படும்போது அதைக் கேட்காமல் , மனத்தை வேறிடம் செலுத்தி, இழிவான வார்த்தையாடலில் உள்ளத்தைச் செலுத்துகிறான்.

அந்தணோத்தமர்களே ! நீங்க எல்லோரும் மிகவும் புண்ணியத்தை அளிக்கக்கூடிய இராமாயணம் என்ற உயர்ந்த காவியத்தைக் கேட்பீர்களாக அதைக் கேட்பதாலேயே பிறப்பு-முதுமை-இறப்பு பற்றிய அச்சம் போகும். அந்த மனிதன் மாசற்ற மனம் உடையவனாகிறான். ஏன் , அந்த மனிதனே அச்யுதன் வடியானவனாகிறான். மிகவும் மேன்மையுடையதும், பெறற்கரிய பேற்றினை அருள்வதும், அடியார் விரும்பிக் கேட்கும் வரங்களை அருள்வதுமான இந்தக் காவியம், எல்லாம் மக்களையும் சம்சாரக் கடலை எளிதாகக் கடக்கச் செய்கிறது. அடியார்களின் உள்ளக்கிடக்கையைப் பூர்த்தி செய்யும் இந்தக் காவியத்தைக் கேட்பவன், இராமபிரானுடைய தனிப் பெரும் உலகையே சென்றடைகிறான்.

பிரும்மா-விஷ்ணு-ருத்ரன் என்ற பெயருடைய வேவ்வேறு உருவமேற்று , உலகங்களைப் படைத்து-காத்து-அழிப்பவனும், முழுமுதற்கடவுளும், மிகுந்த மகிமை பொருந்தியவனும், விரும்பத்தக்கவனுமான அந்தப் பரம்பொருளைத் தன் மனத்தில் நிலைநிறுத்தி இடைவிடாது பக்தி செலுத்துபவன் மோட்சத்தை அடைகிறான். எவன் பெயர்-தொழில் என்ற வேற்றுமைகள் அற்றவனோ, காரண-காரியங்களுக்கு அப்பாற்பட்டவனோ, மகோன்னதமான நிலையில் உள்ளவனோ, வேதாந்த சாஸ்திரங்களை ஊன்றிப் படிப்பதால் அறியத்தக்கவனோ, தன் இயல்பான ஒளியினால் பிரகாசிப்பவனோ, அவன் எல்லா புராண-வேதங்களைக் கற்றவர்களால் கண்களால் காணத்தக்கவன். அந்தப் பரவஸ்துதான், இராமன். இராமாயணத்தைப் பக்தி-சிரத்தையுடன் படிப்பதால் பரமாத்ம தரிசனம் கிடைக்கும்.

தொடரும் …..

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள், ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்